**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.130 /2019**

**Deposition of P.W.** 11

Name : திருமதி. சிவசங்கரி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 08.10.2025

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இத்றுகு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 20.01.2018ம் தேதி கொற்றிகோடு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜாண் கிறிஸ்துராஜ் என்பவர் கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண். 12/2018 பிரிவுகள் 294(பி), 307, 341, இ.த.ச மற்றும் 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டபடியான வழக்கை பதிவு செய்து அந்த வழக்கை திருவட்டார் காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு. ரவீந்திரன் அவர்கள் முதல்விசாரணை செய்து ஒப்படைக்கப்பட்ட வழக்கு கோப்பை நான் 20.01.2018ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை

.2.

விசாரித்த போது சாட்சிகள் சந்திரசேகர், ரெஜி, ரவி ராஜசேகர் ஆகியவர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். தர்மா, செல்லப்பன், கார்த்திக் ஆகியவர்கள் முந்தைய காவல் ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்த படியால் வழக்கின் எதிரியை தேடிய போது கிடைத்த ரகசிய தகவல் படி வழக்கின் எதிரியான சுரேஷ் என்பவரை வேர்கிளம்பி சந்திப்பு சாமியார்மடம் திருப்பு அருகே வைத்து 10.30 மணிக்கு கைது செய்தேன். அவரை விசாரிக்க அவர் எவ்வித துன்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரமேஷ், செல்வின் ஆகியவர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.00 மணிக்கு எதிரி ஆஜர் செய்த அரிவாள் மற்றும் TN 75 L 0290 என்ற ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8. அத்தாட்சி அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10, படிவம் 95 – அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12. பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் சேதப்படுத்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு சேதமதிப்பு வழங்கிய சாட்சி வி
னுகுமார் என்பவரை விசாரித்து சேதமதிப்பு பெற்றேன். எனக்கு பணி மாறுதல் வந்து விட்ட படியால் வழக்கு கோப்பை எனக்கு பின்னர் வந்த



காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளிடம் நான் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். எதிரியை ஊர்மக்கள் விரட்டி சென்றதில் அவர் ஸ்கூட்டியை எடுத்து தப்பி செல்ல ஓடிய போது தவறி கீழே விழுந்ததில் காயங்கள் ஏற்பட்டதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் கொற்றிக்கோடு காவல்நிலைய உதவி ஆய்வாளர் சுரேஷ்–ஐ அழைத்து சென்றதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி ரெஜி தனது வாக்குமூலத்தில் ரவிராஜசேகர், தர்மராஜ், மற்றும் சிலர் சத்தம் போடவே சுரேஷ் இருசக்கர வாகனத்தில் ஏறி சந்திரசேகரை பார்த்து அரிவாளை காட்டி மிரட்டி செல்லும் போது வாகனத்திலிருந்து விழுந்து விட்டார் என்றும் சுரேஷ்–க்கு காயம் ஏற்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையின் படியும் சாட்சியின் வாக்குமூலம் படியும் சம்பவ நேரம் மாலை 06.45 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்திற்கு எவ்வளவு சேதம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சேதமதிப்பு சான்றில் சந்திரசேகரின் இருசக்கர வாகனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ரெஜிக்கு சொந்தமான வாகனம் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரெஜி வாகனம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 20.01.2018ம் தேதி காலை 10.30 மணிக்கு வேர்கிளம்பி சந்திப்பில் வைத்து எதிரியை கைது செய்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனம் எதிரியின் குடும்ப வீட்டிலும், அரிவாளை சம்பவம் நடந்ததாக



சொல்லக்கூடிய ஆற்றுபாலத்தில் வீசியதாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சம்பவ இடத்தின்

அருகே ரப்பர்தோட்டமும் ஆங்காங்கே வீடுகளும் இருந்தது எனவே விசாரிக்கவில்லை. ஆனால் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளை விசாரித்துள்ளேன். காயம்பட்ட நபருக்கு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி 14,01,2018ம் தேதி மாலை காவல்நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளரும் 2 காவலர்களும் சேர்ந்து எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்று கண்மூடி தனமாக தாக்கி பல்வேறு காயங்களை ஏற்படுத்தி அவர் காவல்நிலையத்தில் வைத்துஇறந்து விடுவார் என்று பயந்தும் எதிரி வழக்கு போட்டுவிடுவார் என்பதாலும், கொற்றிக்கோடு காவல்நிலையத்தின் கையிருப்பு சாட்சியான சந்திரசேகரை அழைத்து அவரால் உருவாக்கப்பட்ட காயத்தை வைத்து மருத்துவமனைக்கு அனுப்பி பொய்யாக வாக்குமூலம் பெற்று எதிரிமீது இருந்த பிற வழக்குகளில் உள்ள சாட்சிகளை வைத்து போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல எதிரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால சரியல்ல.